**மிஹிந்தலை பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

மிஹிந்தலை பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள்பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள் ‘ உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் பாதகமான அபிப்பிராயத்திற்காக அடிப்படை பகுதியில் கலந்துரையாடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மிஹிந்தலை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) வட மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரினால் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வழங்கப்பட்ட 2019/02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் புதிய கணக்கீட்டு முறைமையின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்ய முடியாதிருந்தது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது வீதிகள், பாலங்கள், மற்றும் மதகுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதும் அந்நிலையான சொத்துக்களுக்குரிய பயனுள்ள ஆயுட்காலம் அல்லது பெறுமானத்தேய்வு வீதம் நிதிக்கூகூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கின்றேன். | சொத்துக்களுக்குரிய பெறுமானத்தேய்வுக் கொள்கை,பயனுள்ள ஆயுட்காலம் அல்லது பெறுமானத்தேய்வு வீதம் என்னவென்பது வெளிப்படுத்தப்பட வேண்டும். |

1.6.2 **கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காசேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் பொது காசுக் கணக்கு மற்றும் நிர்மாண காசுக் கணக்கின் மீதிகள் முறையே ரூபா 562,164 தொகை மற்றும் ரூபா 839,676 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் முறையே ரூபா 2,275,722 மற்றும் ரூபா 2,408,483 என ரூபா 3,282,365 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தன. | ஏற்றுக் கொள்கிறேன் | நிதிக்கூற்றுக்கள் மூலம் காசு மீதியின் சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | பிரதேச அபிவிருத்தி உதவி செயற்திட்டத்திற்குரியதாக மீளாய்வாண்டின் போது பிரதேச சபைக்கு கிடைத்த ரூபா 2,773,300 தொகை சபைக்கு சொந்தமான நடைமுறைக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்த போதும் அது நடைமுறைச் சொத்தாக கணக்கீடு செய்யாமையால் சபையின் காசு மீதி ரூபா 2,773,300 ஆல் குறைவடைந்திருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன் | சபைக்கு சொந்தமான சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும் |
| (இ) | உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்தின் கடனுக்காக மீளாய்வாண்டிற்குரிய செலுத்திய வட்டி ரூபா 143,489 தொகை மீளாய்வாண்டின் செலவினமொன்றாக கணக்கீடு செய்யாமையால் ஆண்டின் இலாபம் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தன. | ஏற்றுக் கொள்கிறேன் | வட்டிச் செலவினம் சரியாக விரிவான வருமானக் கூற்றில் பதிவுசெய்யப்பட வேண்டும். |
| (ஈ) | சபைக்குச் சொந்தமான ரூபா 4,500,000 ஆன நிலையான வைப்புக்களுக்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய வட்டி வருமானம் ரூபா 58,836 ஆக இருந்த போதும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் அது ரூபா 247,500 எனக் கணக்கீடு செய்தமையால் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 188,664 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தன. | ஏற்றுக் கொள்கிறேன் | பெறவேண்டிய வட்டி வருமானம் சரியாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | புதிய வர்தத்க தொகுதியின் 09 புதிய கடைகளை வாடகைக்கு வழங்குவதற்காக மீளாய்வாண்டின் போது பெற்றுக்கொண்ட ரூபா 4,500,000 ஆன பிணை வைப்புக்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் செலுத்த வேண்டியதாக கணக்கீடு செய்யாமையால் சபையின் பொறுப்பு ரூபா 4,500,000 ஆல் குறைவடைந்திருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன் | செலுத்த வேண்டிய பிணை வைப்புக்கள் நடைமுறை பொறுப்பாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் இலாபம் சீராக்கப்பட்டதன் பின்னர் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிதியத்தின் மீதி ரூபா 274,652,431 ஆக இருக்க வேண்டிய போதிலும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் அது ரூபா 17,462,493 என காண்பிக்கப்பட்டமையால் சபையின் மொத்த உரித்து ரூபா 257,189,938 ஆல் குறைவடைந்திருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன் | திரண்ட நிதியக் கணக்கு சரியான மீதி சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்றில் காண்பிக்கப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டிற்காக கிடைத்த மூலதனச் செலவின மானியம் ரூபா 9,136,730 ஆக இருந்த போதும் சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்றில் அது ரூபா 251,621,181 என காண்பிக்கப்பட்டமையால் சபையின் உரித்து ரூபா 242,484,451 ஆல் அதிகரித்திருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன் | சரியான மூலதனச் செலவின மானியம் சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்றில் காண்பிக்கப்பட வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டிற்காக செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணங்களுக்காக சபையினால் ஒதுக்கீடு செய்து கணக்கீடு செய்யாமையால் சபையின் செலவினம் மற்றும் செலுத்த வேண்டிய செலவினம் அப்பெறுமானத்தினால் குறைவடைந்திருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன் | சபையின் செலவினம் மற்றும் செலுத்த வேண்டிய செலவினம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஐ) | வருமான பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கிடைத்த மீண்டெழும் செலவின மானியம் ரூபா 49,079,130 ஆக இருந்த போதும் விரிவான வருமானக் கூற்றில் அது ரூபா 20,276,320 என காண்பிக்கப்பட்டமையால் ஆண்டின் இலாபம் ரூபா 28,802,810 ஆல் குறைவடைந்திருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன் | விரிவான வருமானக் கூற்றில் சரியான மீண்டெழும் செலவின மானிய பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 679,212 ஆன ஓய்வூதியம் செலுத்த வேண்டியதென சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் காண்பிக்கப்படாமையால் சபையின் நடைமுறைப் பொறுப்புக்கள் அப்பெறுமதியால் குறைவடைந்திருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன் | செலுத்த வேண்டிய செலவினம் இனங்காணப்பட்டு அப்பெறுமதி தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும் |
| (ஓ) | விரிவான வருமானக்கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டின் இலாபம் ரூபா 6,249,600 ஆக இருந்த போதும் அது திரண்ட நிதியத்தில் சீராக்கும் போது ரூபா 5,104,742 என கணக்கீடு செய்தமையால் திரண்ட நிதியம் ரூபா 1,144,838 ஆல் குறைவடைந்திருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன் | சரியான இலாபம் / நட்டப் பெறுமதி திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட வேண்டும். |
| (ஔ) | மீளாய்வாண்டின் நீண்டகால கடன் தவணைக் கொடுப்பனவு ரூபா 601,767 ஆக இருந்த போதும் காசுப்பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 1,382,475 என காண்பிக்கப்பட்டமையால் நிதி செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சல் ரூபா 1,984,242 ஆல் அதிகரித்திருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன் | கடன் தவணைக் கொடுப்பனவு காசு வெளிப் பாய்ச்சலாக காசுப் பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட வேண்டும். |
| (க்) | மீளாய்வாண்டின் போது ரூபா 4,500,000 ஆன நிலையான வைப்புக்களாக முதலீடு செய்யப்பட்டிருந்த போதும் காசுப்பாய்ச்சல் கூற்றில் அது முதலீட்டு செயற்பாடாக கணக்கீடு செய்யப்படாமையால் காசுப்பாய்ச்சல் ஆண்டினுள் தேறிய காசு அதிகரிப்பு அப்பெறுமதியால் அதிகரித்திருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன் | நிலையான வைப்புக்களில் முதலீடு காசுப் பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட வேண்டும். |
| (க) | தொழிற்பாடு, முதலீடு மற்றும் நிதிச் செயற்பாடுகளிலிருந்து மீளாய்வாண்டின் போது இடம்பெற்ற தேறிய அதிகரிப்பு ரூபா 41,555,410 ஆக இருந்த போதும் காசுப்பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 3,767,040 என கணக்கீடு செய்யப்பட்டமையால் ஆண்டின் தேறிய காசு அதிகரிப்பு ரூபா 37,788,370 ஆல் குறைவடைந்திருந்தது | ஏற்றுக் கொள்கிறேன் | காசுப் பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (கா) | செயற்திட்ட அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட வீதிகள், பாலங்கள், மதகுகள் என்பவற்றின் பெறுமதி ரூபா 9,136,730 ஆக இருந்த போதும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் அது ரூபா 2,000,000 என கணக்கீடு செய்தமையால் நிலையான சொத்துக்கள் ரூபா 7,136,730 ஆல் குறைவடைந்திருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன் | நிலையான சொத்துக்கள், சரியாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் காண்பிக்கப்பட வேண்டும். |
| (கி) | சபைக்கு கிடைத்த கழிவுப்பொருள் அரைக்கும் இயந்திரத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 500,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன் | சபைக்குச் சொந்தமான நிலையான சொத்துக்கள் தொடர்பாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (கீ) | ஹிக்கடுவ பிரதேச சபைக்கு கழிவுப் பொருள் அரைக்கும் இயந்திரமொன்றை வழங்கியமைக்காக சபைக்கு கிடைத்த ரூபா 1,000,000 தொகை வைப்புக்களாக கணக்கீடு செய்யப்படாமல் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டமையால் ஆண்டின் இலாபம் அப்பெறுமானத்தினால் அதிகரித்திருந்ததுடன் வைப்பு மீதி அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன் | மூன்றாம் தரப்பினருக்கு கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய பணம் வைப்பாக மாத்திரம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (கு) | சபைக்குச் சொந்தமான ரூபா 1,692,500 ஆன நீர் பவுசர் மற்றும் 04 ட்ரேலர்கள் கணக்குகளுக்கு உட்படுத்தப்படாமையால் சபையின் நிலையான சொத்துக்கள் அப் பெறுமானத்தினால் குறைவடைந்திருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன் | சகல நிலையான சொத்துக்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் ஊடாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.6.3 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 11 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் அவற்றிற்குரிய | ஏற்றுக் கொள்கின்றேன் | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

பயன்பாட்டு பதிவேடுகள் மற்றும் அட்டவணைகளில் காண்பிக்கும் மீதிகளுக்கு இடையே ரூபா 47,623,694 ஆனவேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,249,600 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவீனம் ரூபா 2,650,387 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வாடகை | | |
| | சபைக்குரிய 64 கடைகளிலிருந்து 2018 ஆம் ஆண்டிலிருந்து அறவிடாமல் காணப்படும் நிலுவை வாடகை வருமானம் ரூபா 5,214,950 ஆக இருந்ததுடன் அத்தொகையை அறவிடு வதற்காக தேவையான நடவடிக்கைககள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டிலிருந்து அறவிடப்படாமல் காணப்படும் கடை வாடகை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கடை வாடகை கொடுப்பனவு தவிர்ப்புச் செய்யப்பட்டுள்ளதால் நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்கு விரைவாக சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | | |
| | நிலுவை வருமானம் தொடர்பாக பதிவேடுகள் பேணுதல் இடம்பெறாதிருந்ததுடன் ரூபா 375,865 ஆன அனுமதிப்பத்திரக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டி ருக்கவில்லை. | வருமானத்தை இனங்காண்பதற்காக கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | ஏனைய வருமானம் | | |
| | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய அறிவித்தல் பதாதை | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நினைவூட்டல் கடிதங்கள் | ஏனைய வருமானத்தை அறவிடுவதற்கு |

| | |
|---|---|
| கட்டணங்கள் ரூபா 274,025 அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் பெகோலோடர், களி பௌசர் மற்றும் நீர் பௌசர் என்பவற்றை வாடகைக்கு வழங்கியமைக்காக வெளித் தரப்பினரிடமிருந்து சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 402,300 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | இத்தொகையை அறவிடுவதற்குஉரிய தரப்பினருக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

**3.2 சரச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மிஹிந்தலை நூலகம் மற்றும் கேட்போர்கூடத்தை நிர்மாணிப்பதற்காக பிரதேச சபையால் தேசிய கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திடமிருந்து ரூபா 3,958,710 ஆன கடன் தொகையை பெற்றுக்கொள்வதற்காக தவணையொன்றிற்கு ரூபா 50,150 ஆன மாதாந்தம் தவணையாக மாதாந்தம் கொடுப்பனவு செய்யப்பட்டு வந்த போதும் அக்கேட்போர்கூட நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எந்தவொரு செயற்திட்டமொன்றின் கீழ் மேல் மாடியை சுற்றுலா கேந்திரமொன்றாக அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்த்துள்ளேன். | கேட்போர்கூட நிர்மாண செயற்பாடுகளை பூர்த்தி செய்து பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) சபை அதிகாரப் பிரதேசத்திற்குரிய பலுகஸ்வெவ மற்றும் 5 ஆம் வாய்க்கால் உக்குலங்குளம் ஆகிய இரண்டு பிரதேசங்களில் 02 RO நீர் வடிகட்டி இயந்திரங்களை பொருத்துவதற்காக தேவையான கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு அதற்காக 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 2,836,523 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் அச்சொத்துக்களை சபையின் சொத்துக்களாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கின்றேன். | சொத்துக்களின் தன்மையின் செலவினம் இனங்காணப்பட்டு நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 4. கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 சுற்றாடல் சிக்கல்கள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| கழிவுகளை வெளியேற்றுவதற்கு குறித்துரைக்கப்பட்ட இடமொன்று இல்லையென அறிவித்து பிரதேச சபை கழிவுப் பொருள் சேகரிப்பினை நிறுத்தியிருந்ததுடன் அதிகாரப் பிரதேசத்தில் உருவாகும் கழிவுகளை முறையற்ற வகையில் காட்டுப்புற சூழலில் வெளியேற்றப்பட்டு வந்தன. | இதற்காக காணியொன்று கிடைத்துள்ளதுடன் நிதி ஏற்பாடு கிடைத்தவுடன் அதன் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும் | கழிவுகளை முறையாக வெளியேற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |